**கவனிக்க.**-2022.07.08 ஆந் திகதிய 2288 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப் படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2289 - 2022 ජූලි මස 15 වැනි සිකුරාදා - 2022.07.15
*2289 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1079 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1082 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1076 | ஏல விற்பனைகள் | 1084 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1077 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம் சட்டமூலம் 2022, யூன் மாதம் 24ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1075 - B 082363 - 5,403 (2022/07)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- சம்மாந்துறை

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

*சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2022.08.11 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.*

*இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.*

*இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்கவேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.*

*ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.*

*நீதிவான்,*
*நீதிவான் நீதிமன்றம்,*
*சம்மாந்துறை.*

*2022.06.21.*

**பகிரங்க ஏல விற்பனைக்கான சான்றுப் பொருட்களின் விபரம்**

| *தொ.இல.* | *வழக்கிலக்கம்* | *வாகனப் பதிவு இல.* | *சான்றுப் பொருட்களின் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 1 | 24566/MT/20 | EP BDJ - 5569 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2 | 25487/MT/21 | EP XA - 5154 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | AR/3002/22 | 152-4232 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகத்துக்காக மட்டும்) | 01 |
| 4 | AR/3003/22 | 158-8525 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகத்துக்காக மட்டும்) | 01 |
| 5 | AR/3005/22 | EP MR - 6420 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகத்துக்காக மட்டும்) | 01 |
| 6 | 27708/Misc/22 | | சவள் | 03 |
| 7 | 27708/Misc/22 | | இரும்பு வாளி | 03 |
| 8 | 27471/MISC/22 | | சவள் | 01 |
| 9 | 27471/MISC/22 | | இரும்பு வாளி | 01 |

| *தொ.இல.* | *வழக்கிலக்கம்* | *வாகனப் பதிவு இல.* | *சான்றுப் பொருட்களின் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 10 | 27481/Misc/22 | | இரும்பு வாளி | 01 |
| 11 | 27501/Misc/22 | | சவள் | 01 |
| 12 | 27498/Misc/22 | | சவள் | 01 |
| 13 | 27498/Misc/22 | | இரும்பு வாளி | 01 |
| 14 | 27586/Misc/22 | | சவள் | 01 |
| 15 | 27635/Misc/22 | | சவள் | 01 |
| 16 | 27650/Misc/22 | | சவள் | 01 |
| 17 | 27651/Misc/22 | | சவள் | 01 |
| 18 | 27658/Misc/22 | | சவள் | 01 |
| 19 | 27731/Misc/22 | | சவள் | 01 |
| 20 | 27731/Misc/22 | | இரும்பு வாளி | 01 |
| 21 | 27799/Misc/22 | | சவள் | 01 |
| 22 | 27798/Misc/22 | | சவள் | 01 |
| 23 | | | River Sand | 27 Cube |
| 24 | | | Dirty Soil | 06 Cube |

*07-142*

---

## ஆய விற்பனையும் குத்தகையும்

### வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத் தவறணைகள்

### குத்தகை விற்பனை

***2023.01.01- 2023.12.31***

*1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளுத் தவறணை உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2023.01.01 தொடக்கம் 2023.12.31 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல். இக் காலப்பகுதியில் கள்ளுத் தவறணைகள் தனி நபருக்காக சில்லறை விற்பனைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2022.08.19 ஆந் திகதி மு.ப.10.30 மணி வரை கேள்விப்பத்திரம் வலப்பனை பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. (அ) இத்தீவின் எந்த பிரதேச செயலகத்திலும் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்;

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும் ;

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும் போது, கள்ளுத் தவறணைகளினது குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும் ;

(ஈ) கேள்விப் பத்திரம் நிரப்பும் போது கேள்விக்காரர் கீழ்க் காணும் முக்கியத்துவங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்;

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட்ட சாட்சியாளர்களின் கையொப்பத்துடன் தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் ;

(iv) ஒவ்வொரு கேள்விதாரர்களும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையின் பிரதியை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப் பத்திரத்திற்காக வைப்பு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு வலப்பனைப் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில், கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலவெல்லைக்குள் இடப்படல் வேண்டும். தபால் மூலம் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் குறித்த தினத்தில், இறுதி நேரத்துக்கு முன் கிடைக்கும்படி பதிவுத்தபாலில், “பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வலப்பனை,” என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விதாரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ பிரதேச செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் விற்பனைத்தினத்தன்று பி.ப.2.00 மணிக்கு முன் வலப்பனை பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை பிணைப்பணமாக வலப்பனைப் பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும் . மேற்படி வைப்புப்பணம், நில்தண்டாஹின்ன , மக்கள் வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்குத் தேவையான முத்திரைகள் கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரங்கள் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2022.09.19 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் மீள விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது தொடர்பான இறுதியான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

எஸ். பீ. லிந்தகும்புர,
பிரதேச செயலாளர்,
(ப.கடமை),
வலப்பனை.

பிரதேச செயலகம்,
வலப்பனை.
2022.06.21.

### அட்டவணை

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப்பணம் ரூபா |
|---|---|---|---|---|
| இல. 05 பதியபெலெல்ல | வலப்பனை பிரிவிற்குள் | 2022. 08.19 | மு. ப. 10.30 | 5,000 |

07-76

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர்:* ஓட்டோஆம் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்
*பதிவிலக்கம்:* பீவீ 00255578
*பதிவு முகவரி:* இல.129/1, ரத்னம் வீதி,
கொழும்பு 13

கம்பனிச் செயலாளர்.

07-136

---

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

3829 என்ற இலக்கத்தைக் கொண்டுள்ளதும் 2019, ஓகத்து 23 ஆந் திகதியிடப்பட்டதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. மாக்கவிட்டகே கிங்ஸ்லி பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் கொழும்பு 02, கிளனி தெரு, 61 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த தர்மதாச சமரசிங்ஹவினால் (560621477V) என்ற இலக்கத்தைக் கொண்டுள்ள தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர்) பன்னிப்பிட்டிய, மாலபள்ள, ஸ்ரீ சுதர்ஷணாராமய என்ற முகவரியைச் சேர்ந்தவரும் 561641056V என்ற இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டையைக் கொண்டவருமான வணக்கத்துக்குரிய அக்ரஹேர காசப்ப தேரோ என்பவருக்கு வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட விஷேட அற்றோணித் தத்துவமானது 2022.01.18 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதெனவும், மேற்குறிப்பிட்டுள்ள அற்றோணித்தத்துவத்தின் கீழ் எந்தவொரு நடவடிக்கைக்கும் அல்லது செயற்பாட்டிற்கும் பொறுப்பாகாது என இலங்கைச் சனநாயாக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

தர்மதாச சமரசிங்ஹ.

07-131

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

Graekenlands vej, 12,3 tv,2300 koebenhavn-s, Danmark எனும் முகவியில் வசிக்கும் தற்பொழுது மட்டக்களப்பு, நாவற்குடா, கங்காணிப்பிள்ளையார் கோவில் வீதி எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி புலேந்திரா மோகனசந்திரன் (கடவுச்சீட்டு இல. 211624901) ஆகிய நான், மட்டக்களப்பு, நாவற்குடா , பூநொச்சிமுனை வீதி, எனும் முகவரியைச் சேர்ந்த சந்திராதேவி இராஜதுரை (தே.அ.அ.இல. 598203105V) என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு Birger Petersen Notary Public of Copenhagen, Denmark அவர்களால் 2018 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட மட்டக்களப்பு பதிவாளர் அலுவலகத்தில் போலியோ இல. 75 வொல்யூம் 26 சீரியல் 404 இல் பதியப்பட்ட விசேட அற்றோத்தத்துவத்தினை 2018 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன், அத்துடன் சொல்லப்பட்ட என் சார்பில் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

(திருமதி) புலேந்திரா மோகனசந்திரன்.

07-130

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இரத்மலானை, பொருபன, ராஜசிங்ஹ மாவத்தை, இல. 14 என்ற முகவரியில் வசிக்கும் தே.அ.அ.இல. 680141428V ஐ உடைய அஹமட் எல் சவுரி லமீருடீன் ஆகிய நான்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் பொது மக்களுக்கு அறிவிப்பதாவது, கொழுமபு பிரசித்த நொத்தாரிசு எச்.ஏ.ஆர். நாநாயக்கார என்பவரினால் 2015, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 759 ஆம் இலக்கமுள்ள விசேட அற்றோணி உரிமத்தின் மூலம் இக்மன் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியினால், நான் அற்றோணிதாரராக நியமிக்கப்பட்டதுடன், அவ்வாறு எனக்களிக்கப்பட்ட 759ஆம் இலக்க விசேட அற்றோணி உரிமமானது, என்னால் இரத்துச் செய்யப்பட்டது. அதன் பிரகாரம், இன்று முதல் அவ் அற்றோணிதாரரான என்னால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் செல்லுபடியற்றதெனவும் அவ் அற்றோணி உரிமம் செல்லுபடியற்றதாக உள்ளதெனவும், இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

அஹமட் எல் சவுரி லமீருடீன்.

07-133

---

## சிறப்பு அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

சிலாபம், குருநாகல் வீதி, தேச உயன, இல.115/ 27 இல் வசிக்கும் நானாகிய புலிசிங்க முதியன்சலாகே தரிது மாலக (தே.அ.அ.இல. 200132203880/கடவுச்சீட்டு இல. N 7395612) ஆகிய நான் ஜப்பான், டோக்கியோ நகரில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் இராஜ தூதரும், சமாதான நீதவானுமாகிய ஜி.ஜி. எஸ்.சி.றொஷான் முன்னிலையில் எனது சட்டபூர்வமான ஒரே

அற்றோணியான வென்னப்புவ, வடக்கு கொலிஞ்சாடிய, “ரசிரோ” 192 ஆம் இலக்கத்தைச் சார்ந்த வர்னகுலசூரிய சதேஷ் நிம்ரோய் பர்னாந்துவுக்கு வழங்கிய சிறப்பு அற்றோணித் தத்துவப்பத்திரம், புத்தளம் மாவட்டம், மாரவிலவில் உள்ள துணை பதிவாளர் நாயக அலுவலகத்தின் 03 ஆம் இலக்க கட்டுப்புத்தகத்தின் கீழ் 56 ஆம் இலக்க மடிப்புத்தாளில் 125ஆம் இலக்க தினப்புத்தகத்தின் கீழ் 2021.01.22 ஆந் திகதியில் பதியப்பட்டுள்ளது. இந்த சிறப்பு வெளிநாட்டு அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மூலம் நான் எனது மேற்கண்ட அற்றோணிக்கு வழங்கிய சகல தத்துவங்களையும் இன்று முதல் இரத்துச் செய்து விட்டேன் என்பதை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன். இந்த அற்றோணித் தத்துவப்பத்திரம் செயல் இழந்து விட்டது. இது தவிர நான் யாருக்கும் வேறு எவ்வித அற்றோணித் தத்துவப் பத்திரத்தையும் வழங்கவில்லை.

புலிசிங்க முதியன்சலாகே தரிது மாலக.

07-134

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இரத்மலானை, பொருபன, ராஜசிங்ஹ மாவத்தை, இல. 14 என்ற முகவரியில் வசிக்கும் தே.அ.அ.இல. 680141428V ஐ உடைய அஹமட் எல் சவுரி லமீருடீன் ஆகிய நான்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் பொது மக்களுக்கு அறிவிப்பதாவது, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச்.ஏ.ஆர். நாநாயக்கார என்பவரினால் 2018, மே மாதம் 14 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1164 ஆம் இலக்கமுள்ள விசேட அற்றோணி உரிமத்தின் மூலம் இக்மன் (பிரைவட்) லிமிட்டட் கம்பனியினால், நான் அற்றோணிதாரராக நியமிக்கப்பட்டதுடன், அவ்வாறு எனக்களிக்கப்பட்ட 1164ஆம் இலக்க விசேட அற்றோணி உரிமமானது, என்னால் இரத்துச் செய்யப்பட்டது. அதன் பிரகாரம், இன்று முதல் செயல்வலும் பெறும் வகையில் அவ் அற்றோணிதாரரான என்னால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் செல்லுபடியற்றதெனவும் அவ் அதிகாரமானது இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும், இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

அஹமட் எல் சவுரி லமீருடீன்.

07-132

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், முகுனுவடவன, மைத்ரீ உயன, 382 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கல்கமுகே ஷிரானி தம்மிகா (தேசிய அடையாள அட்டை இல. 785371984V) ஆகிய நான், என்னால் எனது சட்டபூர்வ அற்றோணி அதிகாரமுடையவராக வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், முகுனுவடவன, மைத்ரீ உயன, 382 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஹேரத் பதிரென்னெஹெலாகே உதயசாந்த புஷ்ப குமார (தேசிய அடையாள அட்டை இல. 721242242V)என்பவரை நியமித்து எழுதப்பட்ட சட்டத்தரணியும் பிரசித்தி பெற்ற நொத்தாரிசான என்.எச்.எம்.சிரியானி தீபிகா நவரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல.537 மற்றும் 2015.04.27 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணி அதிகாரத்தை இன்று முதல் அழித்து வெற்று வெறிதுமாக்கி இரத்துச் செய்து விட்டேன் என்றும் இதன் பின்பு எனது சார்பில் குறித்த ஹேரத் பதிரென்னெஹெலாகே உதயசாந்த புஷ்ப குமார என்பவருடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பல்ல என்றும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கல்கமுகே ஷிரானி தம்மிகா.

07-135

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், வென்னப்புவ, சார்ள்ஸ் விலியம் மாவத்தை, இல. 668/B என்னும் முகவரியில் வதிந்த தற்பொழுது Bergama (BG) Via Della Vittoria n.3, Italy இல் கடமையாற்றும் (தே.அ.அ.இல. 812661310V மற்றும் கடவுச்சீட்டு இல. N 8344293) உடைய இமிஹாமி முதியன்சேலாகே பண்டார தயா நிசாமன் அல்லது இமிசாமி முதியன்சேலாகே தயா நிசாமன் பண்டார மற்றும் அம்முகவரியில் வதியும் (தே.அ.அ.இல. 798192299V மற்றும் கடவுச்சீட்டு இல. N 8344364) உடைய கோட்ட ஹேவகே பர்னாந்து மேரியன் சுரேஷா அல்லது கோட்ட ஹேவகே மேரியன் சுரேஷா பர்னாந்து என்பவர்களினால் வென்னப்புவ, சார்ள்ஸ் மாவத்தை, இல. 668/B என்னும் முகவரியில் வதியும் (தே.அ.அ.இல. 551861392V) கோட்ட ஹேவகே ரெக்ஷி கிருஷ்டோபர் பர்னாந்து என்பவருக்கு அதிகாரம் அளித்த நிருபமா பொன்சேகா பிரசித்த நொத்தாரிசினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் 2021.03.31 ஆந் திகதி இத்தாலி நாட்டின் மிலான் நகரத்தில் இலங்கை தூதுவர் முன்னிலையில் மற்றும் சாட்சியாளர்கள் முன்னிலையில் ஒப்பமிடப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தினை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழித்து இதன் பின்னர் அற்றோணி அதிகாரம் பெற்றவரினால் செய்யப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் நாம் பொறுப்புக்கூற மாட்டோம் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இமிஹாமி முதியன்சேலாகே பண்டார
தயா நிசாமன் அல்லது

இமிசாமி முதியன்சேலாகே தயா நிசாமன்
பண்டார

கோட்ட ஹேவகே பர்னாந்து மேரியன் சுரேஷா
அல்லது கோட்ட ஹேவகே மேரியன் சுரேஷா
பர்னாந்து.

07-151

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாகொல, மாகொல தெற்கு, சப்புகஸ்கந்த வீதி, இல. 10/பீ/4 மற்றும் தற்போது இல.4, Media Crescent, Banksiagrove 6031 Western Australia வில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே ரசிதா டிலானி (தே.அ.அ.இல. 836301315V) மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் N 3608601) ஆகிய நான், கம்பஹா பகிரங்க நொத்தாரிசு திரு. ஆர். ஏ.பீஎம்.பெரேராவினால் உறுதி செய்யப்பட்ட இல. 424 மற்றும் 2019, திசெம்பர் 27 ஆந் திகதிய விசேட அற்றோணி அதிகாரத்தின் மூலம் கொழும்பு -03, 5 ஆம் லேன், இல. 96 இல் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே ஒமாலி சமுத்ரா (தே.அ.அ.இல. 967173010V) மற்றும் கடவுச்சீட்டு இல. N 7783070) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரம் 2022.03.31 ஆந் திகதி முன் இரத்துச் செய்யப்படுவதாகவும், அவரால் இதன் பிறகு மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புகூற மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

ஹேரத் முதியன்சேலாகே ரசிதா டிலானி
என்பவரின் அற்றோணி அதிகாரி.

07-152

---

## வழக்கறிஞரின் அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 65, ஒய்படவத்தை சுற்றறிக்கை வீதி, பெந்தோட்டையைச் சேர்ந்த நான், வாடியபத்திரகே காமினி ஜயவீர, 196326201744 (632621744V) என்ற தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவர், ஶ்ரீமாலி ரோஹன பப்ளிக் நன்சிபுல், கொழும்பு , பப்ளிக் நன்சிபுல் சிங்ஹே புனாகே அவர்களின் சான்றளிக்கப்பட்ட இல. 471 ஐக் கொண்ட அற்றோணி அதிகாரத்தை நிறைவேற்றினார். ஜயவீர, இலக்கம் 65, ஒய்படவத்தை சுற்றுவட்ட வீதி, பெந்தோட்டையில் தேசிய அடையாள அட்டை இல. 571460807V) வைத்திருப்பவர் எனது சட்டத்தரணி, 2013, மாச்சு 17 ஆந் திகதியிட்ட அற்றோணித் தத்துவ இல. 471 இன்று முதல் இரத்துச் செய்யப்படுகிறது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாடிய பத்திரகே காமினி ஜயவீர.

07-161

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

முன்னர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நுகேகொட, ஜம்புகஸ்முல்ல மாவத்தையில் இல. 89A இல் வசித்த மற்றும் தற்போது பிரான்ஸ், 78230 லூ பெக், எஸ்கலியர் B, அவெனியு சார்ல்ஸ் டி கோல் இல. 13 இல் வசிக்கும் தீயகஹகே மஹிந்த ஶ்ரீலால் டி சில்வா (தே.அ.அ.இல. 562481354V) மற்றும் கடவுச்சீட்டு இல. N 2387177) ஆகிய நான், பிரான்ஸின் தூதுவரால் அத்தாட்சி செய்யப்பட்ட 2014.12.01ஆந் திகதியிடப்பட்டதும் பொரலஸ்கமுவ, ரத்தனபிட்டிய, பாடசாலை ஒழுங்கை, இல. 19, "ஶ்ரீயானி" எனும் முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷ முதியான்சேலாகே வத்தேகெதர ரோஹண திலக பண்டார விஜேரத்ன ( தே.அ.அ.இல. 543550574) என்பவருக்கு வழங்கப்பட்ட இல.1005 நாள் புத்தகத்தில் பாகம்/பக்கம்160/ 61 இல் பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்பட்டதாகவும் மேற்கூறப்பட்ட ராஜபக்ஷ முதியான்சேலாகே வத்தேகெதர ரோஹண திலக பண்டார விஜேரத்னவினால் மேற்கூறப்பட்ட விசேட அற்றோணித் தத்துவங்களின் அதிகாரங்களின் மூலம் செய்யப்படும் எவ்வித காரியத்துக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

தீயகஹகே மஹிந்த ஶ்ரீலால் டி சில்வா .

07-263

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கோட்டே, மிரிஹான, ரஜமஹா விஹாரய வீதி, இல.228/ 2 இல் நிரந்தரமாக வசிக்கும் நாணயக்கார வேவகே தொன் அனுர நாணயக்கார ( தே.அ.அ.இல. 197501202523) ஆகிய நான், கொழும்பு 05, மிரிஹான வீதி, இல .13/30 ஐச் சேர்ந்த அலபடகே ஶ்ரீயானி ( தே.அ.அ.இல. 197259701800) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு K.P.G.V.K. டயஸ் குணசேக்கரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022, சனவரி 28 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை 2022, யூலை 03 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன். அவரது சொல்லப்பட்ட அற்றோணிதாரர் என்ற வகையில் அலபடகே ஶ்ரீயானியினால் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் அல்லது உறுதிகள் சார்பாக நான் பொறுப்புக்கூற மாட்டேன்.

நாணயக்கார வேவகே தொன் அனுர
நாணயக்கார.

2022, யூலை 03.

07-271

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைக் குத்தகை விற்பனை-2023

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் 1983 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய கால எல்லைக்குள் இங்கு காணப்படும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளதும் வெளிநாட்டு மதுபான தவறணைகள் ( தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) குத்தகைக்குக் கொடுத்தல், 2023 ஆம் காலப்பகுதிக்குள் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் ( தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) தனி நபருக்கான சில்லறை விற்பனைக் குத்தகை கொடுப்பனவுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19ஆந் திகதி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள நேரம் வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. (அ) அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான விண்ணப்பப்படிவமாக இருத்தல் வேண்டும்.*

*(ஆ) நிரந்தர வைப்புப் பணமாக அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.*

*(இ) பிராந்திய மேலதிக அரசாங்க அதிபரால்/ பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்வித் தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அசைவற்ற ஆதனங்களின் அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் போது வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் நிபந்தனைகளுக்குட்டபட்டவாறாக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.*

*(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கேள்விதாரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.*

*1. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும்.*

*2. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.*

*4. சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.*

*3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கேள்வி மனு செய்யப்பட வேண்டிய கால எல்லைக்குள் இடப்பட வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவு தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.*

*4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு கேள்விதாரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.*

*5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.*

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனைத் தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்குக் குறையாத பிணைப்பணம் அம்பகமுவ பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் "பிரதேச செயலாளர்" என்ற பெயரில் கினிகத்தேனை மக்கள் வங்கியில் நிரந்தர சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணமானது பணம், காசோலை அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகள் செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளினதும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7.நியமிக்கும் தவணைக்கட்டணம் மாதாந்தக் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

9 . மேற்படி திகதியில் குத்தகைத் தவறணைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் 2022.10.19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்குக் கொடுப்பது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

**வெளிநாட்டு மதுபான தவறணைகள்**

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை நிறுவப் பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் கால எல்லை | பிணைப்பணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. நோர்வூட் | நோர்வூட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2022.09.19 மு.ப.10.30 | 5,000.00 |
| 2. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2022.09.19 மு.ப.10.30 | 5,000.00 |
| 3. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2022.09.19 மு.ப.10.30 | 5,000.00 |

சிதாரா ருவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்தேனை,
2022, யூன் 27.

07- 146

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்*

*கடன் வசதி தொடர்பு இலக்கங்கள்:72552585, 77195873, 77196427 மற்றும் 79574476.*

*நிரந்தர மேலதிகப் பற்று தொடர்பு இல.: 6694364*

*திருமதி படுவாவல கங்கானமலாகே பத்மா சுவர்ண காந்திக்குச் சொந்தமான ஈடுவைத்த 1 ஆவது ஆதனமும் திருமதி மல்லவ ஸ்ரீ பிராஹ்மன சேனாநாயக்க முதியான்சேலாகே ரம்யா குமாரி சேனாநாயக்கவுக்கு சொந்தமான ஈடுவைத்த 2 ஆம் 3 ஆம் ஆதனங்களின் விற்பனை.*

*இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.12.07ஆந் திகதிய 2101 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.11.26ஆந் திகதிய "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நில மனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த* T&H *ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.டீ. கருணாரத்ன அவர்கள் முதலாவது சொத்தை 2022.08.23 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கும் இரண்டாவது சொத்தை மு.ப. 11.30 மணிக்கும் 3 ஆவது சொத்தை ந.ப. 12.00 மணிக்கும்* BOC *மஹோ கிளை வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

### அட்டவணை

*1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி ஹத்பற்று மாஹோ பஹல விசிதெக கோறளை பிரதேச சபை எல்லைகளில் மாஹோ பிரதேச செயலாளர் பிரிவில் கிரிமெட்டியாவ பலாத்த கிராம அலுவலர் பிரிவு இல. 142 இல்* F.V.P. *3691 இல் தலங்கெதர கிராமத்தில் அமைந்த அரசாங்கக் காணி - வடக்கு : தலங்கெதர மஹவெவயும் ; கிழக்கு : தலகம வரை பிரதான வீதியும் ; தெற்கு : திவுல்கஹ வெல்வட்டயும் ; மேற்கு : தலங்கெதர மஹவெவயும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நிகவெரட்டிய காணிப் பதிவகத்தில்* LDO Nika/Maha/ *46/ 228 இலிருந்து* Nika/Maha/*46/ 249 வரை கொண்டு செல்லப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

